முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1686

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**11.05.2024**, சனிக்கிழமை

1. ஞான வேலிகொண்ட அரங்கனே
ஞானிகள் பலம் கொண்ட தேசிகனே
வானவர்கள் போற்றுகின்ற அரங்கனே
வள்ளலாய் வாழுகின்ற தேசிகனே
2. தேசிகனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
தெரிவிப்பேன் ஞான அறிவுரை ஆசி
ஆசிதனை குரோதி தகர் திங்களில்
(குரோதி வருடம் சித்திரை மாதம் 28 ம் நாள், 11.05.2024, சனிக்கிழமை)
அரங்கனுக்கு சக்தி பெருக எடுத்துரைப்பேன்
3. உரைக்கவே அரங்கன் உயர்கொள்கையாம்
உயிர்கொலை நீக்கி வாழும் சன்மார்க்க நெறி
வரங்களாக மக்களிடை நாளும் பரவப்பரவ
வையகமே தர்ம லோகம் ஆகும்
4. ஆகவே அரங்கனை நாடி வரும் மக்களுக்கு
ஆற்றலை ஆறுமுகன் யான் தந்தருள்வேன்
வரங்களாக அரங்கன் தொடர்புகொண்டு
வையகத்தில் செய்கின்ற தர்மங்கள் அத்துனையும்
5. தர்மங்கள் அத்துனையும் உலகை காக்கின்ற
அரங்கனின் தவபலமாக தன்னிகரில்லாத ஞானபலமாக மாறி
அவனிக்கு மாற்றம் காணக்கூடும்
அரங்கன் அவதாரத்தின் நோக்கமும் பூர்த்தியாகக்கூடும்
6. கூடவே அன்னதனால் உலகோர்
குரு அரங்கன் ஞானத்தை தொடர்ந்து
திருவருளாக ஏற்று வந்தால் போதும் தேசமெங்கும் தேசிகன் கொள்கை
ஆற்றலாகப் பரவி உலகமாற்றம் சடுதி நிகழக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே —சுபம்—